[1981 ஆகஸ்ட் 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவை இப்படித் தான் பதில் சொல்ல வேண்டும் என்று யாரும் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கம் அளித்திருந்தபோதிலும், சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களைப் பற்றிச் சொல்வதற்கு விட்டு விட்டிருக்கலாம். ஆகையினால் அவர்களை விடுதலை செய்வது பற்றி அரசு முடிவு என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : விரிவான பதிலைக் கொடுத்துவிட்டேன். அரசாங்கம் மனிதாபிமானத்துடன் உரிய நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்கும். எந்தவிதமான மந்தப் போக்கும் இதில் இல்லை என்பதை நான் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆகவே இதற்கு மேல் விரிவாகப் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின் வாரியத்தின் கணக்குகளின் மீதான மேற்படி குழுவின் ஒன்பதாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.